# JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS), TRICHY – 20.

## CIRCULAR

All HoD's / MID's / Coordinators of our college are requested to adhere to the following guidelines issued by the Director of Collegiate Education, Chennai, in connection with the Industrial Visits proposals for according permission to the students and staff members who undertake the visits.

1. Permission letter from the Industry concerned, approving the visit and date.
2. Permission letter from the Head of the Department concerned.
3. Plan of the proposed Industrial visit.
4. List of staff members and students who intend to go for the Industrial visit
5. A copy of syllabus relevant to the visit.
6. Consent letter from parents and students for the visit.
7. The student – teacher ratio has to be 15:1 one accompanying staff member (Teaching / Non-Teaching) for every 15 students.

   All the above documents duly signed by principal must be submitted to the Regional Joint Director of Collegiate Education's Office, Tiruchirappalli, through the college office before 20 days of the visit.

Note:

1. All the enclosures must be submitted as per the guidelines given above, failing which the according of permission from Regional Joint Director of Collegiate Education's Office, Tiruchirappalli, office will not be granted.
2. After returning from the Industrial visit, a report highlighting the fulfilment of academic purpose, must be submitted by both the teacher and the students to the Office Superintendent (not later than three days).
3. For further, clarifications (if any) our College Office Superintendent may be contacted.

Tiruchirappalli – 20.

Date: 21.09.2019

**PRINCIPAL**

---

For circulation among all the staff.

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
TIRUCHIRAPPALLI-620 020

CONSENT LETTER FROM STUDENTAND PARENT FOR EDUCATIONAL TOUR

1. Name :
2. Roll No :
3. Class : Sec :
4. Gender : Male / Female / Transgender
5. Father's Name :
6. Mother's Name:
7. Guardian if any :
8. Address :

9. Contact Mobile No :

Photo

Tour Date From: ____________To; ________________.

Tour Place;_________________________________________________.

DECLARATION

I permit my son/ daughter who is studying in ____________ class of JAMAL MOHAMED COLLEGE TIRUCHIRAPPALLAI, to go on an Educational Tour which is arranged by the Department of ___________. My son/daughter will abide by the rules and regulations of the organization wherever applicable.

Signature of Student.

Signature of parent
(                    )

Date:

Place:

122986

Manager
copy to
All HOD's / MIC
Co ordinator
29/11/2016

கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ.) அவர்களின் செயல்முறைகள், சென்னை –600 006

பிறப்பிப்பவர் :திரு.இராஜேந்திர ரத்னூ,இ.ஆ.ப.,

திருவள்ளுவர் ஆண்டு 2047, ஐப்பசி திங்கள் 29 ஆம் நாள்

ந.க.எண்.44042/என்3/2016 நாள் :14.11.2016

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை –அரசு / அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கல்வியியல் கல்லூரிகள் – மாணவர்களை கல்விப் பயணம் அழைத்து செல்வதற்கு அனுமதி வழங்குதல் – மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களுக்கு அதிகாரத்தினை (Delegation of Power) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநரின் குயிப்பாணை எண்:40426/என்3/2016 நாள்:19.10.2016

******

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை, அறிவியல், கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை கல்விப் பயணம் அழைத்துச் செல்வதற்கு முன் அனுமதி ஆணைத் துறைத் தலைவர் என்ற நிலையில் கல்லூரிக் கல்வி இயக்குநரால் இது நாள் வரையில் வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்காணும் கல்விப் பயணம் முன்அனுமதி கோரும் கருத்துரு காலதாமதமாக பெறுவதாலும் குறுகிய கால அவகாசத்திற்குள் பெறப்படும் கருத்துருவின் மீது அனுமதி வழங்க இயலாததாலும் இயக்குநரின் அனுமதி பெறுவதில் நிர்வாக ரீதியான இடர்பாடுகள் உள்ளதாலும், இனிவரும் காலங்களில் மாணவர்களை கல்விப் பயணம் அழைத்து செல்வதற்கு முன் அனுமதி விரைவாக வழங்கும் பொருட்டு, துறைத்தலைவராகிய கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அடுத்த நிலையில் மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்கநர்கள் உள்ளதால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை, அறிவியல், கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை கல்விப் பயணம் அழைத்துச் செல்வதற்கு இயக்குநரால் வழங்கப்பட்டு வந்த முன் அனுமதியினை சார்ந்த மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களுக்கு அதிகாரம் (Delegation of Power) வழங்கி ஆணையிடலாகிறது.

மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை, அறிவியல், கல்வியியல் கல்லூரிகளில் கல்விப் பயணம் செல்வதற்கு முன்அனுமதி வழங்குவதற்கு முன் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என அனைத்து மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

நிபந்தனைகள்

1. கல்விப் பயணம் செல்லும் காலம் 7 நாட்களுக்கு மிகையாகாமல் இருத்தல் வேண்டும். 7 நாட்களுக்கு மிகையாகும் கல்விப் பயணம் அனுமதி கோரும் கருத்துருக்களை இணை இயக்குநர், இயக்குநருக்கு அனுப்பி அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மேலும் கல்விப் பயணம் செல்ல அனுமதி வேண்டி அனுப்பப்படும் கருத்துரு குறைந்தது 20 நாட்களுக்கு முன் பெறப்படுதல் வேண்டும்.

2. கல்விப் பயணமானது பாடத்திட்டம் மற்றும் மாணவர்கள் பயிலும் கல்வித் திட்டத்திற்கும் தொடர்புடையதாக இருக்க வேண்டும், பயன்தரக் கூடிய இடங்களுக்கு செல்வதற்கு மட்டும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், அது சார்ந்த பல்கலைக் கழக பாடத்திட்ட தகலினை முதல்வர் சான்றொப்பமிட்டு அனுமதி கோரும் கருத்துரு பெறப்படுதல் வேண்டும்.

3. கல்விப் பயணம் செல்வது குறித்து தொடர்புடைய மாணவர்களின் பெற்றோரிடமிருந்து இசைவுக் கடிதம் பெறப்பட்டுள்ளதா என்பதை கல்லூரி முதல்வர் கருத்துருவில் தெரிவித்தல் வேண்டும். அதனை இணை இயக்குநர் உறுதிப்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்க வேண்டும்.

(த.பி.பா)

4. சார்ந்த பாடதுறைத்தலைவரின் கல்வி பயண அனுமதி கோரும் கடிதம், பயணத் திட்டம், கல்விப்பயணம் செல்லும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெயர் பட்டியல்கள் ஆகியவைகளில் தவறாமல் முதல்வர் சான்றொப்பமிட்ட கருத்துரு பெறப்படுதல் வேண்டும்..

5. கல்விப் பயணம் இடங்களை குறிப்பிடும் போது மாநிலத்தை மட்டும் குறிப்பிடாமல் ஊர்களின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

6. துறைத்தலைவரிடமிருந்து கல்விப் பயணம் வேண்டி பெறப்படும் கருத்துருவினை முதல்வரின் முகப்பு கடிதத்துடன் கல்விப்பயணம் உள்ளடங்கிய அனைத்து விவரங்களையும் தெரிவித்து கல்லூரி முதல்வர் அனுமதி கோருதல் வேண்டும்.

7. எக்காரணத்தினை முன்னிட்டும் இணை இயக்குநரின் அனுமதி பெறப்படாமல் உள்ளூரிலோ அல்லது வெளியூரிலோ கல்விப் பயணம் மேற்கொள்ளுதல் கூடாது. கல்விப் பயணம் வெளிநாடுகளுக்கு செல்வதாக இருப்பின் இயக்குநரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். இணை இயக்குநரின் அனுமதி பெறப்படாமல் கல்விப்பயணம் மேற்கொள்ளப்பட்டால் கல்லூரி முதல்வர் மற்றும் சார்ந்த பாடத் துறைத்தலைவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. கல்விப் பயணம் முடிவுற்றப் பின்னர் அது குறித்த அறிக்கையினை பயணம் சென்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் பெற்று கல்லூரி முதல்வர் இணை இயக்குநருக்கு உடனடியாக தவறாமல் அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. கல்விப் பயணத்தின்போது 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்/ஒரு ஆய்வுக்கூட உதவியாளர்/ஒரு அடிப்படை ஊழியர் என்ற விகிதத்திலும் மற்றும் அதன் பகுதி மாணவியர்களுக்கு ஒரு பெண் ஆசிரியர்/ ஒரு பெண் ஆய்வுக்கூட உதவியாளர்/ஒரு பெண் அடிப்படை ஊழியர் என்ற விகிதத்திலும் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

10. மாணவர்கள் தொடர்பாக பயணப்படியோ அல்லது வேறு வகையிலான செலவினம் எதுவும் அரசு நிதியிலிருந்து செய்தல் கூடாது. மேலும் மாணவ /மாணவியர்களின் பாதுகாப்புக்கு எந்தவித குந்தகமும் இல்லாமல் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.

11. இயற்கை சீற்றம், பேரிடர்கள், தொடர்மழை ஏற்படும் காலங்களில் கல்விப்பயணம் திட்டமிடுதலை தவிர்த்திடுமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இச்சூழ்நிலையினை அவ்வப்போது கண்காணித்து அதனை கருத்தில் கொண்டு அதனடிப்படையில் மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் கல்விப் பயணத்திற்கு அனுமதி வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

12. பேருந்து பயணம் மற்றும் இரயில் பயணம் இவைகளில் பயணம் திட்டமிடப்படும் போது மாணவர்களின் பயணத்திற் பாதுகாப்பு நலன் கருதி இரயில் பயணத்திற்கான வழிவகை இருப்பின் அதற்கு முன்னுரிமை அளித்து கல்விப் பயணம் மேற்கொள்ளுமாறு கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தலாகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ)

21.11.16

பெறுநர்:

1. அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
2. அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கல்லூரி முதல்வர்கள் (உரிய வழியாக)
(மாணவர்களின் கல்விப் பயணம் செல்வதற்கு அனுமதி வேண்டி சார்ந்த இணை இயக்குநரை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நகல்: இவ்வியக்கக 'எப்' மற்றும் 'ஜி' பிரிவுகள்

126-178

# திருச்சிராப்பள்ளி கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை: முனைவர். மு.ம.செந்தமிழ்ச்செல்வி, எம்.எஸ்சி.,எம்.பில்.பிஎச்.டி.**

ந.க.எண் 1263 /அ3/18

நாள்26.03.2018.

பொருள்:அரசு உதவி பெறும் கல்லூரிகள்- திருச்சி ஜமால்முகமது கல்லூரி தாவரவியல்துறை இளநிலை இரண்டாமாண்டு மாணவர்கள் 38 பேர்- 28.03.2010 முதல் 30.03.2018 வரை 3 நாட்கள் ஊட்டி கல்விச்சுற்றுலா செல்ல அனுமதி வழங்குதல் சார்பு

பார்வை: கல்லூரி முதல்வரின் கடித ந.க.எண்556/சி/2018 நாள் 21.03.2018

**ஆணை:**

பார்வையில் காணும் கல்லூரி முதல்வரின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற கருத்துருவில் இளங்கலை தாவரவியல்துறையில் இரண்டாமாண்டு பயின்று வரும் மாணவர்கள் 38 பேர் 3 உதவிப்பேராசிரியர்களுடன் பல்கலைக்கழக பாடத்திட்டத்தின்படி 28.03.2018முதல் .30.03.2018 வரை 3 நாட்கள் ஊட்டி கல்விச்சுற்றுலா செல்ல கீழ்காண் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

01. கல்விப் பயணம் செல்வது குறித்து தொடர்புடைய மாணவியர்களின் பெற்றோரிடமிருந்து இசைவுக் கடிதம் பெற்றிருக்க வேண்டும்.
02. கல்விப் பயணம் முடிவுற்றப் பின்னர் அது குறித்த அறிக்கையினை பயணம் சென்ற மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் பெற்று, கல்லூரி முதல்வர் இணை இயக்குநருக்கு உடனடியாக தவறாமல் அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. மாணவியர்களுக்கு பயணப்படியோ அல்லது வேறு வகையிலான செலவினம் எதுவும் அரசு நிதியிலிருந்து செலுத்தக்கூடாது.
04. கல்விச்சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேருந்து வெளி மாநிலங்களுக்குச் செல்ல உரிய அனுமதி (Permit) பெற்றுள்ளதா? (வெளி மாநிலங்களுக்கு செல்லும் பொழுது) பேருந்து ஓட்டுநர் அனுபவம் வாய்ந்தவரா? உரிய ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளரா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
05. மாணவியர்களின் பாதுகாப்புக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும்.
06. இயற்கை சீற்றம், பேரிடர்கள், தொடர்மழை ஏற்படும் காலங்களில் கல்விப் பயணம் திட்டமிடுதலை தவிர்க்குமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்
07. பேருந்து பயணம் மற்றும் இரயில் பயணம் இவைகளில் பயணம் திட்டமிடப்படும்போது மாணவியர்களின் நலன்கருதி இரயில் பயணத்திற்கான வழிவகை இருப்பின் இதற்கு முன்னுரிமை அளித்து கல்விப்பயணம் மேற்கொள்ளுமாறு கல்லூரி முதல்வர்அறிவுறுத்தப்படுகிறார்.
08. கல்விப்பயணம், பாடத்திட்டம் மற்றும் மாணவர்கள் பயிலும் கல்வித்திட்டத்திற்கு தொடர்புடையதாக இருக்கவேண்டும் (பல்கலைக்கழக பாடத்திட்ட நகல் முதல்வர் சான்றொப்பமிட்டு அனுப்பவேண்டும்.
09. கல்விப்பயணத்தின்போது 15 மாணவியர்களுக்கு ஒரு பெண்ஆசிரியர்/ஒரு பெண்ஆய்வுக்கூட உதவியாளர்/ஒரு பெண் அடிப்படை ஊழியர் என்ற விகிதத்தில் இருக்கவேண்டும்.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
திருச்சிராப்பள்ளி மண்டலம்
திருச்சிராப்பள்ளி-20.

பெறுநர்
முதல்வர்,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

படி:கல்லூரிக் கல்வி இயக்குநர்,சென்னை-6அவர்களுக்கு பணிந்தனுப்பலாகிறது.

Mr G. Narasy

Copy to: Botany

2613